# சென்ட்ரல் மெட்ரோவில் சுரங்க வாகன நிறுத்தம்



■ சென்ட்ரல் மெட்ரோவில் அமைக்கப்பட்டுள்ள, சுரங்க வாகன நிறுத்தம்.

சென்னை, ஜன. 5–

சென்ட்ரல் மெட்ரோ நிலைய சுரங்க வாகன நிறுத்தம், பொங்கலுக்கு திறக்கப்படும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப் பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் மெட்ரோ ரயில் பாதையில், இணைப்பு ரயில் நிலையமாக, சென்ட்ரல் நிலையம் உள்ளது.

மெட்ரோவில், இந்நிலையம், பெரிய நிலை யமாக இருந்தும், வாகன நிறுத்தம் இன்னும் திறக்கப்படவில்லை. சுரங்கத்தில், வாகன நிறுத்த கட்டுமான பணி நடந்து வந்தது. தற்போது, பணிகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளன.

முதல் கட்டமாக, 50 கார்கள், 750 இருசக்கர வாகனங்களை இங்கு நிறுத்தலாம். இந்த வாகன நிறுத்தம், பொங்கலுக்கு திறக்கப்படும் என, எதிர்பார்க்கப்படுகிறது.